# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 02 வியாழக்கிழமை | 18.07.2024 | கதிர் 304







# தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை உலகிற்குக் காட்டுவதுதான் பொது வேட்பாளர் திட்டம்!

## வவுனியாவில் த.சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



**"தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகிற்குக் காட்டுவதுதான் எங்களது விருப்பம். அதுதான் பொது வேட்பாளர் குறித்த விடயம்!" என புளொட் அமைப்பின் தலைவரும் யாழ் மாவட்ட நடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

**வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

2➤



## மகாவம்ச வரலாற்று நூல்கள் அடங்கிய தொகுப்பு உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டது!

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள இலங்கை வரலாற்றின் முக்கிய ஆதாரமான மகாவம்ச வரலாற்று நூல்கள் அடங்கிய தொகுப்பு உலகப் பாரம்பரியச் சின்னமாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு விழாவின் பிரதம விருந்தினராக யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசுலே கலந்து கொண்டார்.

மகாவம்சத்தை உலக மரபுரிமைச் சின்னமாக பிரகடனப்படுத்துவதற்கான சான்றிதழ் யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்தினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் ஜி.எச்.பீரிஸிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன், பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்ததைக் குறிக்கும் வகையில் பிரதி வேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச, பணிப்பாளர் நாயகத்திற்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கி வைத்தார். (04)

## இலஞ்சம் வாங்கிய பொலிஸார் கைது

திருகோணமலை, வான் எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் பணமாக இலஞ்சம் வாங்கும்போது கைது செய்யப்பட்டார்.

ரஜ எல, கந்தளாய் எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட 45 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இலஞ்ச, ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 15ஆம் திகதியன்று மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரைக் கடமை நேரத்தில் பரிசோதித்த மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் உரிய ஆவணங்கள் இன்மையால்

2➤

## லயன்களைக் கிராமங்களாக்கும் திட்டத்துக்கு உடன்படவே முடியாது

### திகாம்பரம் எம்.பி. திட்டவட்டம்



"இருக்கின்ற லயன்களையே கிராமங்களாக்குவதற்கு அரசு முற்படுகின்றது. இதற்கு உடன்பட முடியாது. மக்களும் உடன்படமாட்டார்கள்."

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான

2➤

## நீர்க் கட்டணம் குறைப்பு இந்த வாரத்திற்குள் முடிவு!



புதிய மின் கட்டணத் திருத்தத்திற்கு இணைந தவகையில், நீர்க் கட்டணத்தைக் குறைப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இத்தகவலை வெளியிட்டார்.

2➤

## நாங்கள் பாயும் தவளைகளோ தாவும் குரங்குகளோ அல்லர்!

### மனோ எம்.பி. விளாசல்



"நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம். நாங்கள் பாயும் தவளைகளோ அல்லது தாவும் குரங்குகளோ அல்லர்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடனான சந்திப்பின்

2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## இலஞ்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலஞ்சமாக 10 ஆயிரம் ரூபா கேட்டிருந்தார். உடனடியாக 5 ஆயிரம் ரூபா கொடுத்து விட்டுப் புறப்படட அந்த நபர், மீதித் தொகை 5 ஆயிரம் ரூபாவை நேற்று மாலை 7.20 மணியளவில் கொடுக்கும்போது இலஞ்ச, ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

## நீர்க் கட்டணம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது மின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமைக்காக அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுக்கு பாராட்டுத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்த வாரத்துக்குள் நீர்க் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுமெனவும் எனவும் தெரிவித்திருந்தார்.

## தமிழ்மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில், புளொட் அமைப்பின் தலைவர் காலமாகி 38 வருடங்கள் முடிந்து விட்டன. இந்த 38 வருடங்களுக்குள் ஆயுதப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்திருந்தாலும் கூட என்ன காரணத்திற்காக முதலில் சாத்வீகமாகவும் பின்பு ஆயுதப் போராட்டமாகவும் தமிழ் மக்களால் போராட்டம் தொடங்கப்பட்டதோ அந்தக் காரணம் இன்றும் மாறாது அப்படியே இருக்கின்றது.

மாறாமல் இருப்பதைக் காட்டிலும் இந்த நாட்டில் எம்மவர்களின் தொகை இன்னும் குறைந்து வருவதைப் பார்க்க கூடியதாகவுள்ளது, என்றார்.

சகல வழிகளிலும் தமிழ் மக்கள் மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அது பொருளாதாரம், அரசியல், கல்வி, மக்கண் எண்ணிக்கை என நீண்டு செல்வதாகவும், அண்மைக் காலமாக இந்தியா, கனடா, அவுஸ்ரேலியா என பல நாடுகளுக்கு அதிகளவில் மக்கள் சென்றுள்ளதாகவும் தெரிவித்த அவர், இந்த நிலை தொடருமானால் அது தமிழ் மக்களைப் பின்னடைவுக்கும் படுபாதாளத்திற்கும் கொண்டு செல்லும் எனவும் சுட்டிக்காட்டினார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக மக்கள் வெளி நாடுகளுக்கு குடி பெயர்ந்தாலும், ஓர் இனமாகப் பார்க்கின்ற பொழுது இது ஒரு பின்னடைவு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, பேச்சுவார்த்தை என்று வருகின்ற போது ஜனாதிபதிகூட புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச வேண்டும் எனக் கூறுவதாகவும், அவர்களிடம் இருக்கக் கூடிய அந்த பொருளாதாரப் பலத்தை இங்கு கொண்டு வரலாம் எனச் சிந்திக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும், தொடர்ந்து வருகின்ற எந்தவொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வைக் கொடுக்க தயாரில்லை எனவும் நடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (04)

## லயன்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

"பெருந்தோட்ட குடியிருப்பு பகுதியைக் கிராமங்களாக அறிவிக்கும் திட்டம் பற்றியே பேச்சு நடத்த வந்திருந்தோம். நல்லாட்சியின்போது நான் அமைச்சராக இருந்தேன், தனி வீடுகள் அமைக்கப்பட்டே காணி உரித்துடன் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், இவர்கள் லயன்களைக் கிராமங்களாக்கப் பார்க்கின்றனர். இதற்கு உடன்பட முடியாது என ஜனாதிபதியிடம் தெளிவாகக் குறிப்பிட்டோம்.

எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டு, வீடுகள் நிர்மாணிக்கப்பட்டே கிராமங்கள் உருவாக்கப்பட வேண்டும். காணி உரிமைக்கான எமது குரல் தொடர்ந்து ஒலிக்கும்.

நாம் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில்தான் இருக்கின்றோம். ஜனாதிபதியுடனான சந்திப்பில் தேர்தல் பற்றி பேசப்படவில்லை." - என்றார்.

## நாங்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் எம்.பியிடம், 'ஜனாதிபதி தங்களின் ஆதரவைக் கோரினாரா?' எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த மனோ எம்.பி.,

"ஜனாதிபதித் தேர்தல் பற்றி பேசப்படவில்லை. பெருந்தோட்டப் பகுதிகளைக் கிராமங்களாக அறிவிக்கும் உத்தேச திட்டம் பற்றியே கலந்துரையாடப்பட்டது." - என்றார்.

'ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் யாருக்கு ஆதரவு?' என எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"நாங்கள் இருக்கும் இடம் தெரியும்தானே, ஐக்கிய மக்கள் கூட்டணி. நாங்கள் பாயும் தவளைகளோ அல்லது தாவும் குரங்குகளோ அல்லர்" - என்று மனோ எம்.பி. பதிலளித்தார். (05)

# கடலில் மிதந்து வந்த ஆணின் சடலம் மீட்பு

*பூநகரி - கௌதாரிமுனை கடலில் ஆண் ஒருவரின் சடலம் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டது.*

*தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 53 வயதான நபரே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டார்.*

*மேற்படி நபரைக் காணவில்லை என அவரது உறவினர்களால் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (05)*

# சிறுமி வன்புணர்வு குடும்பஸ்தர் கைது

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவர், இருவேறு ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், சந்தேநபர்களில் ஒருவரான குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சென்றபோதே, அந்தச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிறுமியின் காதலன் ஒருவரும், முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரும் சிறுமியுடன் தகாத உறவைப் பேணியமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து, மேற்படி குடும்பஸ்தர் கைது செய்யப்பட்ட நிலையில், காதலனைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (05)

# பெண்ணின் சடலம் மீட்பு

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோனா கடற்கரையில் ஒரு பெண்ணின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா, அஹமட் லேன் வீதியைச் சேர்ந்த 33 வயதான மஹ்ஷூப் முன்னவ்வரா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் புத்திசுவாதீனமற்றவர் என்றும், கடலில் குளிப்பதற்காக இன்று காலை அவர் கடலில் இறங்கியதால் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பு

சந்தையில் தேங்காய் எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளதால் தாம் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும், நாட்டின் அனைத்து நகரங்களிலும் தேங்காய் எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளதாக அறிய வருகின்றது.

தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்களால் நடத்தப்படும் வர்த்தக மாஃபியாவால் தேங்காய் எண்ணெய் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இந்நிலைமையால் தமது வர்த்தக நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

சாதாரண தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் விலை 500 முதல் 700 ஷரூபா வரை அதிகரித்துள்ளதாக கூறும் பாவனையாளர்கள் இது தொடர்பில் பொறுப்பானவர்கள் உரிய கவனத்தை செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ரெஜ-46)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிழக்கு மாகாண கபடிப் போட்டிகளில் நிந்தவூர் பாடசாலைகள் பிரகாசிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுக்களில், ஆண்களுக்கான கபடிப் போட்டிகளில் நிந்தவூர் மதினா மகா வித்தியாலயம் 17 மற்றும் 20 வயது பிரிவுகளில் தங்கப்பதக்கங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி ஆண்களுக்கான 17 மற்றும் 20 வயதிற்குட்பட்ட கபடிப் போட்டிகளில் வெள்ளிப்பதக்கங்களைப் பெற்ற நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய கல்லூரி தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆடியமாவாசை திருக்கொடியேற்ற நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு இன்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் ஒத்துழைப்பில் கொடியேற்ற உற்சவம் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான பரிபாலன சபையினர், மற்றும் ஆயிரக்கணக்கான கந்தன் அடியார்கள் கலந்து கொண்டனர்.

இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு காலப் பூசைகள் செய்யப்பட்டு, ஆடி அமாவாசை உற்சவமும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.








## சாய்ந்தமருதில் “உதிரம் கொடுத்து உயிர் காப்போம்” எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யூ.எஸ்.எப்.ஸ்ரீலங்கா அமைப்பின் 9 வது ஆண்டு நிறைவையொட்டி கல்முனை அஷ்ரஃப் ஞாபகர்த்த வைத்தியாசாலையின் நிலவும் குருதிப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யுமுகமாக மையோன் கல்வி உதவி நிதியத்தின் பூரண அனுசரனையுடன் “உதிரம் கொடுத்து உயிர் காப்போம்” எனும் தொனிப்பொருளில் இரத்தான முகமொன்று அண்மையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த இரத்த தான முகாமில் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினார்கள்.



# பாரிஸ் தேசத்து தமிழ்ப்பரப்பில் இசை மகுடம்

# தில்லைச்சிவம் என்.கே.துரைசிங்கம்!

இசை கானத்துக்கு நிகரில்லை. இசை கேட்டால் புவி அசைந்தாடும், அது இறைவன் அருளாகும்-ஏழு ஸ்வரங்களுக்குள் உலகம் அடங்கியுள்ளது. தீராத நோய்க்கு, ஆறாத மனக்காயங்களுக்கு இசையே மருந்தாகும்.

இசை புத்துணர்வை தருகிறது. மகிழ்ச்சியைத் தூண்டுகிறது. வலிமையுள்ள சுகமான ராகங்களை கேட்டு உடல் வலிகளிலிருந்து மீண்டவர் உண்டு. இதற்கு உதாரணமாக திகழ்பவர் பாரிஸ் நகரில் வாழும் இசையாளன் எஸ்.எஸ்.தில்லைச்சிவம்.

சங்கீத ஞானம் மிக்க குடும்பத்தில் பிரசவமானவர். அம்மா சங்கீதபூசணம்-தந்தையார் பாடகர் எனவே இசை அத்திவாரம் வீட்டிலே போடப்படுகிறது. இசை சுவாசம் அவரோடு ஒட்டி பிறந்தது யாழ் நகரின் தென்திசையில் வேலணை தான் இவரின்பிறப்பிடம்.

கல்வி, கலை இலக்கியம், மருத்துவம், அரசியல், விவசாயம், கடற்றொழில், ஆன்மீகம் என அனைத்தும் மேலோங்கியிருக்கும் மருதம்-நெய்தல் நிலத்தில் மண் அழைந்து நடந்தவர் தில்லைச்சிவம். பல புலமையாளர்களை உருவாக்கிய வேலணை மத்திய கல்லூரி அவருடைய கல்விக்கண்ணுக்கு வெளிச்சம் இட்டது. பள்ளிப்பருவத்திலேயே சங்கீதப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்றவர். அந்த நாட்களிலே நண்பர்களை ஒன்றிணைத்து இசைக் குழு நடத்தியவர்.

தமிழ்ச் சமூகத்தில் குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிப்பவர்கள் பெற்றோர்கள். இவரின் தாத்தா ஆயுள்வேத பரியாரி. வேலணை சித்தவைத்திய பரம்பரையை கொண்டது. பலர் ஆயுள்வேத வைத்திய துறையிலே கால் பதித்தனர். தாத்தா போல ஒரு பரியாரியாக மகனை உருவாக்குவது அம்மா, அப்பா கனவு. ஆயுள்வேத மருத்துவக் கல்வியை ஊட்டி ஊட்டி வளர்த்தனர்.

### புற்றுநோய் ஆக்கிரமிப்பு

மருத்துவக் கல்வியில் தேறி வைத்தியராகும் தருணத்தில் கொடிய நோயாம் புற்று நோய் பீடித்தது. அது உடலில் நுழைந்து விட்டால் முழுமையாக ஆக்கிரமித்து அனைத்து அவயங்களையும் மெல்ல மெல்லப் பீடிக்கும் இலங்கையில் மகரகம என்னும் இடத்திலே இதன் சிகிச்சை மையம்.

மருத்துவ மாணவனுக்கு மருத்துவம்பார்க்க வேண்டிய நிலை. உரிய மருத்துவம் செய்யப்பட்டபோதும் முழுமை அடையவில்லை.நோய்க்கு எதிராகப் போராடினார்.

இசைத்துறையில் ஆர்வம் கொண்டு இசைக் கருவிகளை கையாளத்தொடங்கினார். இசையே மருந்தென உணர்ந்தார். முழு ஈடுபாட்டுடன் இயங்கினார். பொதுப்பணி, ஆன்மீகம், அரசியல் என சமூக அக்கறையுடன் பயணித்தார்.

இயல்பாகவே இருக்கும் சமூகச் சிந்தனை வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தின் செயலாளராக்கியது. சிரமதானம், ஆலயத்திருவிழாத் தண்ணீர்ப் பந்தல் தொண்டு தொடர்ந்தது.

குறிப்பாக நயினாதீவு உற்சவ நாட்களில் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் தாகசாந்தியை தீர்ப்பதில், அன்னதானம் வழங்குவதில் முன்னின்றவர். தமிழ்த் தரப்பு அரசியலில் கிராம மக்களை அணிதிரட்டியவர். தமிழ் உணர்வினால் தலைவர்களுக்கு இரத்தத் திலகமிட்டு உணர்வை வெளிப்படுத்தியவர்.

### இசைக்கலை

யாழ்ப்பாணத்து இசை ஆளுமைகளான ரங்கன், கண்ணன் போன்ற கலைஞர்களிடம் இசைக்கலை கற்று, அதன் நெளிவு சுழிவுகளை அறிந்து கொண்டார். தன்னை பீடித்த நோய் உடல், உள வலிகளை தந்த போதெல்லாம் இசை இன்பமே அவரை ஆற்றுப்படுத்தியது.

இந்த நிலையில் நாட்டுச்சூழல் இவரை புலம்பெயர வைத்தது. கலைகளின் தாயகமான பிரான்ஸ் மண்ணில் தற்காலிகமாகத் தஞ்சமடைந்தார். ஈழத்தமிழர்கள் புகலிடம் வழங்கியது.

மருத்துவம் உட்பட்ட அனைத்து துறைகளிலும் முன்னேறிவரும் பிரான்ஸ் இவரது நோய்க்கு ஆறுதலும், தேறுதலும் அளித்தது. விட்ட இடத்திலிருந்து சிகிச்சை பெறத் தொடங்கினார். இதேவேளை இசைப்பரப்பிலும் இயங்கத்தொடங்கினார். இசைத் துறைக்கு பிரான்ஸ ில் அதிக கவனம் இருப்பதனை இவர் அவதானித்தார். நவீன இசை நுட்பங்கள், இசைச் சாதனங்கள் இவருக்கு உற்சாக மாத்திரைகளை உட்கொண்டது போல உத்வேகத்தை அளித்தன. ஐ.நா.சபை பல தினங்களைப் பிரகடனப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவது போல பிரான்ஸ் நாட்டிலும் இசைத்திருவிழா வருடத்தில் ஒரு நாள் கொண்டாடப்படுகிறது. அன்று முழுவதும் வீதிகள் மற்றும் பொது வெளிகளில் இசைக்குழுவினர் இசை கச்சேரிகள் நடத்துவார்கள். மொழி மதம் எல்லாம் கடந்து இசை வெள்ளம் பெருக்கெடுக்கும் நாளாக அந்த நாள் காட்சியளிக்கும். தமிழ் இசைக்குழுக்களும் இசையை மீட்டி மக்களை மகிழ்விப்பார்கள். மெட்ரோ மற்றும் ரெயில்களில் இசை ஆற்றுகைகள் நடத்தி பயணக்களைப்பைப் போக்கும். இசைக்கலைஞர்களுக்கு இசைத்திருவிழா உற்சாகத்தை ஊட்டும் நாளாக அமைந்தது.

1982 ஆனி 21 இலிருந்து இசைத்திருவிழா கொண்டாட்டம் நடைபெறுகிறது. பிரான்ஸில் ஆரம்பித்த இந்த திருவிழா 110 நாடுகளில் கொண்டாடப்படுகிறது. இந்த இசைச் சூழலில் கலந்து பாரிஸ் நகரிலும் இசையில் சங்கமித்து தீராத நோய், தணியாத இசைத்தாகம் என இரண்டுக்கும் நடுவே அவர் பயணித்தார்.

### ஈழ நிலா

1995இல் ஈழநிலா இசைக்குழுவை ஆரம்பித்து பிரான்ஸில் ஒரு இசை சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பினார். பாடல்களை வெளியிடுவது, பாடகர்களை உருவாக்குவது, இசையமைப்பது, இசைத்துறை பயிற்சிகள் என ஓய்வில்லாத உழைப்பு.

இசை என்றால் அது இவர்தான் என்று ரசிகர்களால் அங்கீகரிக்கப்பட்ட இசையாளனாக தில்லைச்சிவம் கொண்டாடப்படுகிறார்.

எழுச்சிப்பாடல், தாயகப்பாடல், திரைப்பாடல், பின்னணி இசை என பயணம் நீண்டது.

இசைத்துறையில் சினிமா பாடல்கள் தவிர்க்க முடியாதவை. பழைய, புதிய, இடைக்காலம், சமகாலம் என இந்த பாடல்கள் வகைப்படுத்தப்படும். இவற்றினை விரும்பிக்கேட்கும் ரசிகர்களின் உணர்வுகளுக்கேற்ப பாடல்களை வெளியிட வேண்டும். வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் இவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதால் அவை மக்களிடம் தனித்துவம் பெற்றுள்ளன.

இந்த சவாலுக்கு மத்தியில் இசையில் எம்மாலும் சாதிக்க முடியும் என்று ஈழக்கலைஞர்கள் இன்று நிஷரூபித்து வருகிறார்கள். இதற்கு உதாரணமாக தில்லைச்சிவம் அவர்களின் இசை பங்களிப்பை சுட்டிக்காட்டலாம்.

பல பாடல்களுக்கு அவரது இசை மெருகேற்றியுள்ளது. கலியாண ராகத்தில் அவர் மெட்டமைத்த பாடல் அற்புதமான இசைக்கோர்வையுடன் பட்டிதொட்டியெங்கும் ஒலிக்கும்

பாடல். "அந்த ஆலமரம் நெஞ்சினில் நிறைந்திருக்கு அந்த மாமரம்தான் உள்ளத்தில் நிறைந்திருக்கு ,"

கவிஞர் மாணி.நாகேஸ் வரிகளுக்கு மயிலை.இந்திரன் உயிர்கொடுத்து பாடியுள்ளார். எத்தனை தடவைகள் கேட்டாலும் சலிக்காத பாடல்,வரிகள்,குரல் இனிமை என்பனவற்றுக்கு அப்பால் இசையமைப்பு சிறப்பாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதேபோல வியக்கத்தக்க இசை சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்.

ஈழப்போராட்ட நாட்களில் தாயகத்தில் பல எழுச்சிப்பாடல்கள் மக்களுக்கு தைரியம் அளித்தன. இவரும் அங்கு இருந்திருந்தால் தாயக ஆஸ்தான இசையமைப்பாளர்தான். எனினும் புகலிட

நாடுகளிலுள்ள ஈழத்தமிழர் மத்தியில் தில்லைச்சிவம் ஆஸ்தான இசையமைப்பாளர்தான்.

தில்லைச்சிவம் 70க்கு மேற்பட்ட பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார் . இதில் 40 பாடல்கள் இசைத் தட்டுகளாக உருவெடுத்துள்ளன. ஜீவகானங்கள், மண்தேடும் ராகங்கள், தலைவர் யுகத்தில் உயர்ந்திடுவோம் என்ற பெயர்களில் இசைத்தட்டுகள் வெளியாகின. இதனை மேலும் காலத்தேவைகளுக்கு ஏற்ப பாடல்களுக்கான இசையமைத்து வருகிறார்.

### திரைப்பட இசை

பிரான்ஸ் மண்ணில் எம்மவர் திரைப்படங்களுக்கு இசை அமைத்துள்ளார். அமரர் கீழ்கரவை

பொன்னையனின் புயல், தீ , மலை என மூன்று படங்கள், நாச்சிமார்கோயிலடி ராஜனின் நினைவுமுகம், பிரியாலயம் துரைஸ் தயாரிப்பில் உருவான ராஜாவின் ராகங்கள், நீந்தத் தெரியாத மீன்கள் திரைப்படங்கள், மூத்த கலைஞர் ஏ.ரகுநாதன் ஐயாவின் திரைப்படங்கள் என்பன தில்லைச்சிவத்தின் இசையிலே வெளியானது குறிப்பிடத்தக்கது. திருமறைக் கலாமன்ற மேடைகள், மாவீரர் தின நிகழ்வு, தமிழர் விளையாட்டு விழா என அனைத்து நிகழ்வுகளிலும் தில்லைச்சிவத்தின் இசையே ஆதார சுருதி.

### சோதனை மேல் சோதனை

தீராத நோய் மத்தியிலும் அவர் சோர்வடைந்து போகாமல் இசை பயணத்தைத் தொடர்ந்தவர்.

நாக்கின் கீழே புற்று நோய் தீவிரமாகி, களையெடுக்க முடியாது அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சிகிச்சையின் போது குரல் பாடும் சக்தியை இழந்து விடும். முக அமைப்பிலும் தாக்கம் வரும் என மருத்துவர்கள் எச்சரிக்கை மணியடித்தனர். இஸ்ட தெய்வங்களை வேண்டியபடி சத்திர சிகிச்சைக்கு உடன்பட்டார். சிறிய கால ஓய்வின் பின் மீண்டும் இசையுடனே பயணித்தார்.

சோதனை வந்தது மீண்டும் உடல் நலத்தில் பாதிப்பு.

சிறு நீரகம் செயலிழந்து மருத்துவமனையே தஞ்சமானது. மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டு மீண்டவருக்கு ஆண்டவர் மேலும் சோதனை வைத்தார். மூளைக்கு அருகிலே நரம்பு மண்டலத்தில் இனம் புரியாத வலி! இந்த புதிரான நோய்க்கும் அறுவை சிகிச்சை தான் மருந்தென்று மருத்துவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. மனிதன் எத்தனை வலிகளை சுமப்பது. அதுமட்டுமல்லாமல் தொடரும் வெட்டுக்காயங்களை உடல் ஏற்றுக்கொள்ளுமா? வினாக் குறியுடன் அதனையும் எதிர்கொண்டார். மருத்துவர்களே ஆச்சரியப்பட்டனர்.

மீண்டும் மீண்டு எழுந்தார் தில்லைச்சிவம். அறுபது அகவை தொடும் இவர் முப்பது வருடங்கள் நோயாளியாக மாற்றுத் திறனாளியாக வாழ்வியலை அனுபவிக்கிறார். கடவுள் அருகே இருந்த காரணத்தினால் மனிதனாக எழுந்து இசைத் தேடலில் இன்பம் காண்கிறார்.

### இசைக் கூடம்

சொந்தமாக இசைக்கூடம் அமைத்து "கீ போர்ட்" மூலம் இசைக்கோர்வைகளை உருவாக்கி வருகிறார். வயது வேறுபாடின்றி பாடுந்திறன் உள்ளவர்களை பாடவைக்கிறார். ஒவ்வொருவரும் தங்களுக்கு விரும்பிய பாடல்களை பாடுவார்கள். அதிகமான பாடல்கள் சினிமாப் பாடல்களாக இருந்தாலும் தாயக மற்றும் எழுச்சி பாடல்களுக்கும் பின்னணி இசை தில்லைச்சிவத்தின் கை வண்ணத்திலே ஒலிக்கும். அவை கானொலியாக முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்களில் மக்கள் ரசனைக்கு விடப்படுகிறது. அதற்கு கிடைக்கும் கொமன்ற்ஸ், லைக்குகளே ஆயிரம் பல்லாயிரம்.

இவரது இசை ஆற்றலை அங்கீகரித்து ஊடகங்கள் பல புகழாரம் சூட்டி கானொலிகள், நேர்காணல்கள் வெளியிட்டுள்ளன. இசைக்காக பல விருதுகளையும் பல இசை ஜாம்பவான்களின் பாராட்டுகளையும் பெற்றவர்.

புகலிட நாடுகளில் வாழும் எம்மவர் தொழில்,உணவு மற்றும் வாழ்வியல் வேறுபாடுகளால் வயதுக்கு முன்னரே மூப்படைகின்றனர். மாரடைப்பு, புற்றுநோய், பக்கவாதம், கொரோனா மற்றும் இனம் புரியாத நோய்களுக்கு சொந்தக்காரர்கள். பிரான்ஸ் மருத்துவ சாதனைகளினால் இவர்கள் உயிர்வாழ்கிறார்கள். விழுந்து விட்டோம் என்று ஏங்கிக்கொண்டிருப்பதை விட விழுந்ததும் எழுந்து நிற்பதற்கு தேவையான மன உறுதிவேண்டும்.

தில்லைச்சிவம் அவர்களிடமிருக்கும் மன உறுதியே அவரை நடமாட வைத்துள்ளது.

தடைகளை உடைத்து வெளியே வந்தால் வெற்றிக்கோட்டை தொடமுடியும் என்பதற்கு

இவரை போன்றவர்கள் உதாரண புருசர்களாக திகழ்கின்றனர். இசையே வாழ்வென அதனையே சுவாசித்து,நேசித்து வாழும் இசை அத்தியாயம் தொடர

# மருதமுனை விக்டோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் கலர்ஸ் நைட் நிகழ்வும் புதிய சீருடை அறிமுகமும்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வும் விக்டோரியஸ் கலர்ஸ் நைட் விழாவும் கழகத்தின் ஏற்பாட்டில் தனியார் விடுதி வரவேற்பு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (16) இரவு நடைபெற்றது. விக்டோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எம்.முபீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐ.எல்.முஹம்மது தாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விசேட அதிதியாக கிழக்கின் கேடயம் அமைப்பின் பணிப்பாளரும் முன்னாள் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்து கொண்டு இளைஞர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸின் பிரத்தியோக மக்கள் தொடர்பாடல் இணைப்பாளருமான ஏ.ஆர்.அமீர், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம். நவாஸ் (ஹாரீஸ்), மருதமுனை கிரிக்கெட் சபையின் தலைவர் யூ.எஸ்.சமீம், கிரிக்கெட் சபையின் செயலாளர் எம்.ஐ. நஜ்முல் றியாஸ், அதன் பொருளாளர் எம்.எம்.சறூக், மஸ்ஜிதுல் கவுஸர் பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம்.எம். நிசார் ஜே.பி, தொழிலதிபர் எம்.என் சுஹைப் ஷரூமி உட்பட விக்டோரியா விளையாட்டுக் கழகத்தின் முகாமையாளர் எம்.என்.எம். ஹிஸாம், செயலாளர் எம்.ஏ.எம்.றஜாத், பொருளாளர் ஏ.பி ஆசீர், உப தலைவர் எம்.எம்.தாஹிர், ஆலோசகர் எம்.ரி.வாக்கிர் அஜ்மல், உப செயலாளர் எம்.சி.அகீர்ஜ் உட்பட கழக வீரர்கள், அனுசரணையாளர்கள், பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர். விக்டோரியா விளையாட்டுக்கழகத்தினருக்கு புதிய சீருடையினை பிரதம அதிதி ஐ.எல் முஹம்மட் தாஹிர் வழங்கி அறிமுகப்படுத்திவைத்தார்.

நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளரும் ஊடகவியலாளருமான ஏ.எல்.எம். ஷினாஸ் தொகுத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# உலகவங்கி உதவியுடன் வைத்தியசாலைகளுக்கு ஈ.சீ.ஜீ. இயந்திரங்கள் வழங்கி வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக வங்கியின் நிதி உதவியின் மூலம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டத்தின் ஊடாக கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் குறித்த திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை மற்றும் பெரியநீலாவணை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு ஆகிய வைத்தியசாலைகளின் தேவைகளை கருத்தில் கொண்டு ஈ.சீ.ஜீ.இயந்திரங்கள் வழங்கப்பட்டன. மேற்படி உபகரணங்களை குறித்த வைத்தியசாலைகளுக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பெரியநீலாவனை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் பணிப்பாளரிடமிருந்து ஈ.சீ.ஜீ.இயந்திரங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




# தினசரி அடிப்படை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைப்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்த மற்றும் தினசரி அடிப்படையில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் நிகழ்வு நேற்று (17) சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், திருக்கோயில், ஆலையடிவேம்பு, அம்பாறை, நிந்தவூர், காரைதீவு, நாவிதன்வெளி, இறக்காமம், மஹாஓயா, நாமல்ஓயா, தமண, ல/ஹகல, தெஹியத்தகண்டி, பதியத்தலாவ, உஹன, போன்ற பிரதேச சபை, மாநகர சபை போன்றவற்றில் கடமையாற்றிய 419 பேருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவர் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி. வீரசிங்க, தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா, திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க, திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் ஆணையாளர் முதலமைச்சின் செயலாளர் என். மணிவண்ணன், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எஸ். எம். பி. ரத்நாயக்க, முன்னாள் கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் ஏ.மன்சூர், திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம் முஷாரப்பின் சம்மாந்துறை தொகுதி இணைப்பாளர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம். சஹில், கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், திருக்கோயில், ஆலையடிவேம்பு, அம்பாறை, நிந்தவூர், காரைதீவு, நாவிதன்வெளி, இறக்காமம், மஹாஓயா, நாமல்ஓயா, தமண, ல/ஹகல, தெஹியத்தகண்டி, பதியத்தலாவ, உஹன, போன்ற பிரதேச சபை, மாநகர சபை ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

# தேர்தல் காரியாலயத்திற்கு எதிரே வஜிரவுடன் பலத்த வாக்குவாதம்

## தேர்தல் நடக்குமா நடக்காதா? என சிவில் செயற்பாட்டாளர்கள் கேள்வி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் முறை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இராஜகிரிய தேர்தல் காரியாலயத்திற்கு நேற்று (17) வருகை தந்த ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகிய இருவருடன் அங்கிருந்த சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதில் தேர்தல் அலுவலகத்திற்கு முன்பாக அமைதியின்மை நிலைமை ஏற்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுடன் கலந்துரையாடி விட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் அங்கிருந்து வெளியேற முயன்ற போது அவ்விடத்திற்கு வந்த சிவில் சமூக ஆர்வலர்கள் வஜிர அபேவர்தனவிடம், 'தேர்தலை நடத்துவீர்களா இல்லையா என்று கூறுங்கள், தேர்தல் நடக்குமென்றால் எப்போது நடக்கும் என கூறுங்கள்? 'என கேட்ட போதே அங்கு அமைதியின்மை நிலை தோன்றியது.

அதன்போது பதிலளித்த வஜிர அபேவர்தன, "தேர்தல் நடக்கும் என்பதால் தான் இன்று இங்கு கலந்துரையாட வந்தோம். என்றாலும் தேர்தல் ஒத்திவைப்பு என்பது ஒரு புதிய விடயமல்ல. வரலாற்றில் தேர்தல்கள் ஒத்திவைக்கக்கப்பட்ட சம்பவங்கள் பல நடந்துள்ளன. வாக்களிக்க வந்தவர்களின் கை, கால்களை வெட்டிப்போட்ட ஒரு காலமும் இருந்தது.

இங்கு நீங்கள் வீணாக போலி ஊடகக் கண்காட்சி நடத்தாதீர்கள்" என கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

(ரெஜ-44)



# ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட குழுவிற்கு ஏற்பாடு

## ஜனாதிபதியினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையொட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு ஆகியனவற்றை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளார்.

இதன்படி, ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்கும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் குழுவொன்றை நியமிக்க அதில் முன்மொழியப்பட்டுள்ளது.


இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க சம்பந்தப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரெஜ-45)






## குடிநீருக்கு அல்லற்படும் கிளிநொச்சி கல்லாறு கிராம மக்கள்!





கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குறப்பட்ட கல்லாறு கிராமத்தில் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அந்த மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதியில் நீர் நிலைகளில் நீர் உவர்ப்பாகக் காணப்படுகின்ற நிலையில், குடிநீரை வழங்கும் பொருட்டு கரைச்சி பிரதேச சபையினால் பிரமந்தனாறு கல்லாறு குடிநீர்த்திட்டம் மூலம் பிரமந்தன் பகுதியில் நீர்த்தாங்கியினால் கல்லாறு கிராமத்திற்கு நீர் வழங்கப்பட்டு வந்தது.

குறித்த நீர் வழங்கல் நடைமுறையானது பல நாட்களாக செயலிழந்து காணப்படுகின்றது. இதனால், மக்கள் தூய்மையான குடிநீரை பணம் கொடுத்தே பெறுகின்றனர். ஒரு லீற்றர் நீர் நான்கு ஷரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

பிரதேச சபையும் இடையிடையே பௌஸர் மூலம் நீரை விநியோகத்தாலும், குறித்த நீரை குடிப்பதற்குப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம் தமக்கு நிலையான நீர் விநியோகத்தை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (02)

## பட்டிமன்றம் ராஜா - பாரதி பாஸ்கர் பங்கேற்கும் நிகழ்ச்சி சனி காலை

யாழ் நகரில் பட்டிமன்றம் புகழ் ராஜா - பாரதி பாஸ்கர் பங்கேற்கும் விவாத நிகழ்ச்சி நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனி காலை 8.30 மணிக்கு யாழ் பொது நூலகத்தின் அருகில் உள்ள இந்திய கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்

இந்த நிகழ்ச்சி இன்று வியாழன் மாலை நடைபெறுவதாக ஏற்பாடாகி இருந்த பொழுதிலும் சென்னையிலிருந்தான விமானப் பயணம் இரத்தானதால் ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை நாளை வெள்ளி இரவு அரியாலையில் நடைபெற ஏற்பாடாகிய நிகழ்ச்சி திட்டமிட்டவாறு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2024இல் வெளியிடப்பெற்றது.